செய்தி வெளியீடு எண்:639 நாள்:21.08.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

## ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்களை வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் விற்பனை செய்ய மொத்த விற்பனையாளர்களுக்கு வணிக ஒப்பந்த ஆணை - தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதித் திட்டத்தின்கீழ் ரூ. 1,04,25,833/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (21.8.2021) தலைமைச் செயலகத்தில், ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்களை வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் விற்பனை செய்ய முதற்கட்டமாக 6 மொத்த விற்பனையாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு வணிக ஒப்பந்த ஆணைகளை வழங்கினார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்றடுக்குக் கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் 4.36 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு 41 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, 26.68 லட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்குத் தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமானது பால் மற்றும் பால் பொருட்களை முகவர்கள் மூலமாகச் சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் கத்தார் போன்ற மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 19.7.2021 அன்று நடைபெற்ற கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைக்கு இணங்க, பால் மற்றும் பால் உபபொருட்களை நுகர்வோர்களுக்கு ஏற்ற வகையில் தயாரித்து, அதனை ஆந்திரா மற்றும் தெலுங்கானா போன்ற வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யவும், ஐக்கிய அரபு நாடுகள் (United Arab Emirates) - துபாய், அபுதாபி, ஷார்ஜா, அஜ்மன், ஓமன்(மஸ்கட்), கத்தார், கனடா, அமெரிக்கா (கலிபோர்னியா) போன்ற நாடுகளில் ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலமாக வருடத்திற்குச் சுமார் 60 கோடி ரூபாய் அளவில் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சுமார் 6 கோடி ரூபாய் வரை லாபம் ஈட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆவின் விற்பனையை உலகமெங்கும் விரிவுபடுத்தும் நோக்கில் வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முதற்கட்டமாக 6 மொத்த விற்பனையாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**கருணை அடிப்படையில் பணி நியமனம்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் (ஆவின்) பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 47 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் முதுநிலை தொழிற்சாலை உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளையும், துணைப்பதிவாளர் (பால்பதம்) அலுவலகத்தில் பணிபுரிந்த காலத்தில் உயிரிழந்த ஒரு பணியாளரின் மனைவிக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணையினையும் வழங்கிடும் அடையாளமாக 10 வாரிசுதாரர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**நலத்திட்ட உதவிகள்**

பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதித் திட்டத்தின்கீழ் விபத்தினால் உயிரிழந்த பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ. 2.50 இலட்சம், கல்வி உதவித்தொகை ரூ.25,000/- திருமண உதவித்தொகை ரூ.30,000/-, விபத்தினால் உயிரிழந்த பால் உற்பத்தியாளர்களின் ஈமச்சடங்கிற்கு ரூ. 5,000/- என 44 பயனாளிகளுக்கு ரூ. 1,04,25,833/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.தெ.சு. ஜவஹர், இ.ஆ.ப., ஆவின் மேலாண்மை இயக்குநர் திரு.கே.எஸ். கந்தசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9